
உ
சிவமயம்



வவுனியா பாவற்குளத்தைப் பிறப்பிடமாகவும்,பண்டாரிகுளத்தை
வசிப்பிடமாகவும் உயர் சைவ வேளாளர் குலத்துதித்த செம்மலுமாகிய

அமரர்

# திரு.தளையசிங்கம் பஞ்சலிங்கம் (பஞ்சன்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# இலிங்க மலர்

10.11.2011

உ
சிவமயம்



வவுனியா பாவற்குளத்தைப் பிறப்பிடமாகவும்,பண்டாரிகுளத்தை வசிப்பிடமாகவும்
உயர் சைவ வேளாளர் குலத்துதித்த செம்மலுமாகிய

அமரர்

# திரு.தளையசிங்கம் பஞ்சலிங்கம்
## (பஞ்சன்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# இலிங்க மலர்

## 10.11.2011

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

உயர் சைவ வேளாளர் குலத்தோற்றலாகி
உயர் வாழ்வு எமக்களித்து
ஊக்கம் பெறச் செய்த எம் தெய்வமே.

ஏற்றமுற வைத்தீரே எம்மை
ஏணியாய் தோணியாய் ஏற்றி விடும் பணிசெய்து
வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்த – உம்
நினைவாக 31ம் நாள் நினைவு மலராம்
**"இலிங்க மலரை"**
தங்கள் திருதாழ்களில் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
தாய், குடும்பத்தவர்,
உற்றார் உறவினர்கள்

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



அமரர்

# திரு.தளையசிங்கம் பஞ்சலிங்கம்

(பஞ்சன்)

அன்னை மடியில்
11.06.1962

ஆண்டவன் அடியில்
11.10.2011

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

மண்ணகத்து வாழ்வதனில் மாதவம் புரிந்து நல்ல மாண்புடனே
பழகி வந்த பஞ்சலிங்கம் ஆண்டு கர புரட்டாதி திங்கட்கிழமை தன்னில்
பூண்டதோழ் வளர் பிறை சதுர்த்தசி திதியதனில் சீர் பெரும் கண்திறந்த
சித்தி விநாயகர் திருவடி சேர்ந்த நன் நாள்



## அமரர் திரு. தளையசிங்கம் பஞ்சலிங்கம் அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

அலைகடல் மேல் தோன்றி மிளிரும் அற்புதப் பெட்டகம் என அன்று முதல் இன்றுவரை அயல் தேசத்தினரால் போற்றப்படும் இந்துமா சமுத்திர மத்தியதில் எழில் கொஞ்சும் முத்தான அழகிய தீவாம் ஆழிசூழ் இலங்கையதில் வீரம் செறிந்த வீர மறவர்களை தன்னகத்தே கொண்ட பண்டாரவன்னியன் அரசாண்ட வன்னி நாடாம் வளநாடு எனப் போற்றும் வடபால் அமைந்த வவுனியா நகரினிலே வளமார்ந்த பூமியையும், மண்ணையும் மக்களையும் கொண்டு மகத்துவமாய் விளங்கும் இந்துக்களின் இறுதிக்கிரியை நிகழும் தீர்த்தக்கரையாய் மிளிரும் பாவற்குளமதிலே மணிமுடி போல் ஒளி விளங்கும் வன்னிப் பெரு நிலப்பரப்பில் மின்னுகின்ற செந்நெல் விளையும் நான்காம் யூனிற்றிலே பெற்றோரும், உற்றோரும் செய்த அரும்பயனாய் சர்வதிறத்தவரும் மதிப்பளிக்கும் தபால் உபஅதிபராய் தன்னை நிலை நிறுத்தி தளம் பதித்து தரமாக வாழ்ந்து வந்த தளையசிங்கம் புஸ்பமணி தம்பதியினர்க்கு நல் இல்லற வாழ்வின் பயனாக அவதரித்த ஒன்பது செல்வங்களில் ஏழாவது செல்வப் புதல்வனாக **பஞ்சலிங்கம்** (1962.06.11) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து இரண்டாம் ஆண்டு ஆனி மாதம் பதினொராம் திகதியன்று இப்பூவுலகில் அவதரித்தார்.

பெற்றோரும் உற்றோரும் தாலாட்டிச் சீராட்டி வளர்க்க நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சகல வளங்களும் பெற்று சிறப்புடனே வளர்ந்தார். கல்வி என்பது வாழ்விற்கு அழகு; அதன் பிரகாரம் தம் பிள்ளைகளை கல்வி பெற வைத்தனர் பெற்றோர். அதன் விளைவாக ஆன்றோர் பலரை உலகிற்களித்த வாரிக்குட்டியூர் கணேஸ்வரா மகா வித்தியாலயம் தன்னில் தனது கல்வியைக் கற்று விளையாட்டிலும், கல்வியிலும் சிறந்து விளங்கினார். இவர் கற்ற கல்வியின் பயனாக பொலிஸ் உத்தியோகத்தர் பயிற்சிக்குத் தெரிவானார். அந்நாளில் இருந்த நாட்டின் சூழ்நிலையால் தாயாரின் சொல்லுக்கு மதிப்பளித்து அவ்வேலையை விரும்பாது கைவிட்டார். பின்னர் தனது சுயதொழிலாக வியாபார



நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந்நிலையில் திருமண வயதை எட்டியதும் பெற்றோர்கள் திருமணம் செய்வதற்குத் தீர்மானித்தனர். "மங்கலம் என்பது மனைமாட்சி" என்ற வள்ளுவன் வாக்கிற்கியங்க பெற்றோரும், பெரியோரும் இணைந்து செய்த பயனாக இலங்கைத் தீவின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கடல்வளமும், நிலவளமும் நிறையப்பெற்ற ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும். புண்ணிய பூமியாம் புகழ்பூத்த காரைநகரில் ஆலங்கன்று வயிரவப்பெருமானை அருகில் கொண்ட வேதரடைப்புக் கிராமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரம் கமலாதேவி தம்பதிகளின் ஐந்து செல்வங்களில் மூத்த புதல்வியான ஆசிரியை சுசீலாவை ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு ஆவணிமாதம் இருபத்து நான்காம் திகதி (1992.08.24) கரம்பிடித்து இல்லற வாழ்க்கையை இனிதே தொடர்ந்தார்.

இருவரும் ஆற்றிய இல்லறமெனும் நல்லறத்தின் இனிய பேறாக இரண்டு முத்தான குழந்தைகளை பெற்றெடுத்தார். அவர்களுக்கு மயூரி, தனுஜன் என அழகிய பெயரிட்டு சிறப்புடனே தன் குலவிளக்குகளை வளர்த்து வந்தார். "ஈன்ற புறந்தருதல் தாய்க்குக் கடன்; அதனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன்" என்ற வாக்கிற்கிணங்க நல்ல கல்வி பெறுவதற்கும் நல்ல பண்புகளை வளர்ப்பதற்கும் ஆசானாகத் திகழ்ந்தார். அவ்வகையில் செல்ல மகள் மயூரியை க.பொ.த.உயர்தரம் (A/L) வகுப்பிற்கும், செல்ல மகன் தனுஜனை தரம் 5 வகுப்பு கற்பதற்கும் ஊக்கமளித்தார். "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற வள்ளுவன் குறளுக்கிணங்க நல்ல மனைவியைப் பெற்ற இவர் தனது மனைவி ஆசிரியைத் தொழிலை சிறப்புடன் ஆற்றுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். இவர் தனது பெற்றோரில் அளவுகடந்த பாசம் கொண்டவர். எந்நேரமும் "ஐயா, அம்மா" என்ற நினைப்பிலேயே வாழ்ந்தவர். பெற்ற தாய் தந்தையருக்கு ஏற்ற பணிகள் செய்து அதில் இன்பம் கண்டவர். தந்தையார் அமரர் ஆகிய போதும் தன் தாயாரின் தனிமையைப் போக்க தன்குடும்பத்துடன் சென்று நிறைவு கண்டவர்.



இவருடன் உடன்பிறந்த சகோதரர்களாம் அமரர்.சரோஜினிதேவி பத்மாவதி, விமலாதேவி, குகநாதன், அமரர்.சிவகுமார், சஞ்சீவிலிங்கம், சிறீஸ்கந்தராசா, ஸ்ரீகாந்தன் ஆகிய சகோதரருடனும் அவர்களின் குடும்ப உறவினர்களுடனும் அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்தவர். தனது தந்தைவழி உறவான சிறிய தந்தையாரான சிவலிங்கம் குடும்பத்துடனும் தனது மாமியாரான கமலாம்பிகை குடும்பத்தினருடனும் பற்றும், பாசத்துடனும் பழகி வந்தார். தனது தாய்மாமனார்களான தியாகராஜா குடும்பம், நாகராஜா குடும்பங்களில் பற்றும் பாசமும் வைத்து அன்புடன் பழகினார். தனது சிறிய தாயாரான நாகேஸ்வரி குடும்பத்துடன் கடல்கடந்து இருந்தாலும் பாசமாகத் தொலைபேசியிலும் கதைத்து வந்தார். அவருடைய திருமணவழி உறவினர்களான மைத்துனர்கள் சூரியகுமாரி, சூரியகாந்தி, காந்திநாதன், பவளமலர் ஆகியவர்களுடனும் அவர்களின் குடும்பங்களுடனும் அன்புடனும், பாசத்துடனும் உரிமையுடனும் பழகி குடும்பத்தின் மூத்த மருமகனாக அல்லாது மகனாக நின்று அவர்களுடைய குடும்பத்தைத்தலைமைதாங்கி வழிகாட்டி வந்தார். தனது மனைவியின் தாய்மாமனான வெள்ளைத் தாத்தா என்று அன்புடன் அழைக்கப்படும் பரமநாதி குடும்பத்துடனும் பாசமுடன் உறவு கொண்டார். இவர் நெளுக்குளத்திலே ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம் அருகில் தனது குடியிருப்பை அமைத்து அதில் சகல வளங்களுடனும் வாழ்ந்து வந்தார். இவர் பத்திரகாளி அம்மன் மீதும் தான் பிறந்த இல்லத்திற்கு அருகிலுள்ள கண்திறந்த சித்திவிநாயகர் மீதும் தளராத பக்தி கொண்டவர். எந்நேரமும் நெற்றியில் திருநீறும், சந்தனமும் வைத்து உதட்டிலே புன்சிரிப்புடன் தன் இல்லத்தில் உலா வருவார். வீட்டையே கோயிலாக எண்ணி எப்பொழுதும் சுத்தமாக வைத்திருப்பதில் அக்கறை கொண்டவர். அண்டை அயலவருடன் நல்ல உறவுடன் உதவி செய்து "பஞ்சண்ணை" என்று கூறும்படி அன்புடன் வாழ்ந்தார்.

தன் தொழிலுக்காகப் பண்டாரிகுளத்தில் நிரந்தரமான ஒரு நிலையத்தை அமைத்து அங்கேயும் ஓர் அழகிய இல்லத்தை அமைத்தார். எந்நேரமும் சுறுசுறுப்புடன் தொழில்புரிபவர். சோம்பல் தான் தனக்கு எதிரி என்பதனை தன் குடும்பத்திற்கு உணர்த்துவார்.



தன் அருமை மகளை "தங்கச்சி" என்று வாயார அழைத்துப் பல கதைகள் கூறுவார். தன் தவப்புதல்வனை "தம்பி, தம்பி" என பெற்ற பாசம் பொங்க அரவணைத்து அழைத்திடுவார் அன்புத் தந்தையாக. தன் மனைவியை "சுசி" என்று அன்புடனும் பாசத்துடனும் அரவணைத்து ஓர் நல்ல அன்புக் கணவனாக, உற்ற துணையாக உறவு கொண்ட வாழ்க்கையிலே காலனவன் கண்பட்டு கொடிய நோயே பகையானதே. நோயைக் கண்டு பயப்படாமல் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னர் ஒரு வருடமும் பதினொரு நாளும் உறுதியாக இருந்து பல அரிய சாதனைகள் புரிந்தார்.

தன் மரணத்தை முன்னரே அறிந்த இவர் தன்னை தன் பிறந்த இடத்திற்கே அழைத்துச் செல்லுமாறும், பாவற்குளத்திலேயே தன் இறுதிக்கிரியைகளைச் செய்யுமாறு தன் இளைய தம்பியிடம் கூறிய ஓர் தீர்க்கதரிசியுமாவார். விதியின் விளையாட்டால் காலனவன் பாசக்கயிற்றை நோய் என்னும் கொடிய வடிவிலே வீசவே தன் நாற்பத்தொன்பதாவது வயதிலே 2011ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ந் திகதி தான் பிறந்த இல்லத்திலேயே அதிகாலை 5.30 மணியளவில் இவ்வுலகை விட்டு நீத்து இறைவன் திருப்பாதங்களைப் பற்றிக் கொண்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



உ
சிவமயம்



# பஞ்ச புராணம்

திருச்சிறம்பலம்

## *விநாயகர் துதி*

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்ததித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசு போதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

*- பரஞ்சோதி முனிவர் (திருவிளையாடற் புராணம்)*

## தேவாரம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறாதிரு நிலகண்டம்

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையோ பெருக்கிப் பொழுதினைச்சுருக்கி
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

பாலார்ந்த தமிழ்மாலை
பத்தரடித் தொண்டன் எடுத்து
ஓவாதே அழைக்கின்றான்
என்றருளின் நன்று மிகத்
தேவே! தென் திருத்தில்லைக்
கூத்தாடி! நாயடியேன்
சாவாயும் நினைக் காண்டல்
இனியுனக்குத் தடுப்பரிதே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறி உழறி உமை மணவாளனுக்கான்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் காரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத் துவிகமேயாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

## திருப்புகழ்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிருமிளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளக்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருத்தி வேறுங் கொண்டலின் வடிவினள் மருகோனே
குரங்குலாவும் குன்றுறைகுறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிறம்பலம்



## தாயின் நீங்கா நினைவலைகள்.....



அன்புடனே அழைத்திடுவேன் பஞ்சா பஞ்சா என
பாசம் அதைத் தந்திடுவாய் அன்பு அம்மா என
வாழ்க்கையதில் நான் கண்ட இன்பமெலாம்
உந்தன் இறப்பதனில் இரங்கலாக இறக்கிவைக்கிறேனே

நீ செய்த சேவை எல்லாம் மறப்பேனா நான் இங்கு
நீ எந்தன் உயிரென்று மறவேனே நான் இங்கு
நீ இருக்கும் காலமெலாம் காத்திருப்பேன் வருவாயென
நீ இன்றி தவிக்கின்றேன் நீங்காநினைவோடு

எதனையும் என்னிடத்தே சொல்லிடுவாய் அமைதியுடன்
என்னிடத்தில் வந்திங்கு இறந்தாயே அன்பாலே
எத்தனை வருடமையா நற் சேவை உலகில்ப் புரிந்தாய்
உன் சேவை முடிந்ததென்றோ அதனால் நீ உதிர்ந்தாய்

உடன்பிறந்த உடன்பிறப்பை உயிரினும் உயிராக நினைத்திடும் நீ
உன் இளைய தம்பிதனை விட்டுப் பிரிந்ததேனோ
"காந்தா காந்தா" என நீ அழைத்த அழைப்பெல்லாம்
அழைக்க இனி யார் இருக்கார்?

அன்புள்ள தம்பியாம் காந்தனிடம் அன்பாகக்கதைத்திடும் நீ
அவனிடத்தில் உன் பொறுப்பை பொறுமையுடனே கொடுத்தாய்
அவனுக்கு ஒன்றென்றால் ஓடியே வந்திடுவாய்
ஒன்றுமே அறியாதவனாய் எங்கிருக்கின்றாயோ?



உன் உடலில் உயிராம் நின் பிரிவின் கணம் அதனில்
என்னோடு யார் இருக்கார் என்றல்லோ கலக்கமுற்றாய்
உன் தந்தை எமைவிட்டுப் போன பின்னும்
ஐயா ஐயா என அழைத்தாயே - அழைப்பெங்கே

காலையிளம் கதிரவன் உன் தோற்றம்தனைக் கண்டே
கலக்கம் உற்றது காலனை அழைத்தது போல்
காலனவன் அழைப்பின்றி கவர்ந்திட்டான் உன் உயிரை
கலக்கமுற வைத்திட்டான் அவலை என்மீது

மொட்டவிழ்ந்த பூவெல்லாம் ஒரு நாளில் உதிர்வது போல்
எம்மோடிருந்த நீயும் தான் எமை விட்டுப் பிரிந்தாயே
உன் உடலே பிரிந்ததைய்யா
உன் உயிரோ இருப்பதைய்யா
உணர்வுகளோ நிலைப்பதைய்யா
உனை மறப்பது முடியாதைய்யா.

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

அன்புடன்
அம்மா





# மனைவி புலம்பல்



அன்பிற்கு இனியவரே ஆசைநாயகரே
இன்பமுடன் நான் வாழ இனிய வாழ்வு தந்தீரே
கரம் பிடித்த நாள் முதலாய் கண்போல் காத்தீர்கள்
கருத்துடனே பல பணிகள் கருதியே செய்தீர்கள்

நாம் இருவர் என்றிருந்தோம்; நமக்கிருவர் பெற்றெடுத்தோம்
நால்வர் கொண்ட குடும்பமாக நலமுடனே வாழ்ந்திருந்தோம்
தேன்கூடு போல நாங்கள் சேர்ந்திருந்தோம் அன்பாக
தென்றலான எம் வாழ்வு திசைமாறிப் போனதய்யா.

அன்புடனே என்னை சுசி என்று அழைத்திடுவீர்
ஆசையுடன் நானும் அருகில் வந்து நிற்பேனே
இன்பக்கதை கூறி இனிக்கப் பேசிடுவீர் - பின்
வம்புக்கிழுத்தென்னை வாய்ச்சண்டை போட வைப்பீர்.

செல்லக் குழந்தைகளை அள்ளி அணைத்திடுவீர்
சேட்டைகள் பல செய்து தீண்டியே மகிழ்ந்திடுவீர்
பள்ளிக்கு அனுப்பிடவே பாங்குடனே சேவை செய்வீர்
துள்ளிக் குதித்து நிதம் துடிப்புடனே செயற்படுவீர்

பொல்லாத நோய் ஒன்று சொல்லாமல் வந்ததுவே
போராடிப் பார்த்தோமே உங்களைக் காக்கத்தான் முடியவில்லை
பத்தொன்பது வருட வாழ்வு பகற்கனவாய் போனதப்பா
பாதியிலே எம்மை விட்டுப் பறந்தோடிப் போனாயப்பா!

நீங்காத உம்நினைவு நெஞ்சை என்றும் வாட்டுமப்பா!
நீங்கள் தந்த உறவுகளால் நிம்மதியைக் காண்பேனப்பா!
கண்கண்ட தெய்வம் நீங்கள் கைலாயம் சென்றாலும்
காலமெல்லாம் வணங்கிடுவேன் நல்லாசிகளைத் தாருமப்பா.

அன்புடன்
மனைவி



# மகள் மயூரியின் புலம்பல்

என் அருமை அப்பாவே
எங்கு சென்றீர்கள் எம்மை விட்டு
எங்கெங்கோ தேடினோம் அப்பா
உங்கள் இன்ப முகம் காண்பதற்கு

தங்கச்சி தங்கச்சி என்றென்னை
பாசக்குரலில் அழைத்து விட்டு
பாதியிலே எம்மை விட்டு விட்டு
பறந்தோடிப் போனீரப்பா

கண்ணை இமை காப்பது போல்
எம்மை நீர் காத்தீரப்பா
காலனவன் சதியால் இன்று எம்மை
கதிகலங்க செய்தீரப்பா

எம் வாழ்வில் ஒளிவிளக்காய்
அன்னையாய் தந்தையாய் ஆசானாய் நின்று
அறிவுரை கூறினீர் அப்பா
அளவுகடந்த பாசம் வைத்து
அன்பிற்கு இனிய கதைகள் கூறி
அரவணைத்து வளர்த்தீரப்பா



வெம்பி நான் அழுதாலும்
வேதனைகள் போகாதப்பா
தம்பியை நான் காத்திடுவேன்
தந்தை உங்கள் கனவாக



புத்தகங்கள் படிக்கச் சொல்லி
புத்தியினை ஏற்றச்செய்தீரப்பா
ஒழுக்கத்தைக்கடைப்பிடித்தே
உன்னதமாய் வாழச்சொன்னீரப்பா

உங்கள் பிரிவால் நாம் வாட
உறுதுணையாய் நீங்கள் இருக்க
அன்புக்கரம் நீட்டியெம்மை
ஆசீர்வதித்து காப்பாயப்பா

அன்பு மகள்
ப.மயூரி

## மகன் புலம்பல்

அப்பாவே எங்கள் ஆசை அப்பாவே
எம்மை கண்போல காத்து கருத்துடனே வளர்த்தீர்கள் அப்பா
செல்லமாய் தம்பியென்று சிந்தையிலே வைத்தீர் அப்பா
அன்பு கதை பேசி அணைத்திடுவீர் தினம் தினமும்
நித்திரையில் கூட நான் உங்கள் அருகில் படுத்திருப்பேன் அப்பா
அப்பாச்சி அப்பாச்சி என்று சுற்றிச் சுற்றி வருவேனே உங்களை அப் பா
அன்புடனே என்னை அணைத்து ஆசைப்பட்டதெல்லாம் வாங்கித் தந்தீர்கள் அப்பா
அக்காவும் நானும் இனி யாரை அப்பா அப்பா என்று அழைப்போம்
உங்களின் இலட்சியத்தை நிறைவேற்ற நல்ல பிள்ளைகளாகப் படித்து உங்கள் பெயரை என்றும் நிலை நாட்டுவோம் அப்பா
நீங்கள் தெய்வமாக மேல் இருந்து எங்களை என்றும் ஆசீர்வதியுங்கள் அப்பா.

அன்பு மகன்
ப.தனுஜன்



# சகோதரிகள் புலம்பல்

அன்புடன் அகமகிழ்ந்து
அருகில் இருந்து அரவணைத்த
அன்புத் தம்பி பஞ்சாவே
ஏன் ஐயா எமைப் படைத்தான்
படைத்தவன் ஏன் ஐயா - உன்னை
எங்களுக்கு தம்பியாய் கொடுத்தான்
கொடுத்தவன் ஏன் ஐயா - உன்னை
வேரோடு பிடுங்கி எடுத்தான்
வாழ்வெல்லாம் சிந்தனையோடும்
சிரிப்போடும் நின்று
போராடி ஜெயித்தவனே
காலைப் பொழுதில்
இதயம் நொருங்கிய
சேதி கேட்டோம்
அருட்சோதி இறைவன்
இருள்தனை நிறைத்து
இடருறச் செய்தானே
பிரிந்திட்ட எங்கள் - தம்பியை
விரிந்திட்ட உலகத்தில் - நாங்கள்
இனி எங்கு போய்த் தேடுவோம்
உனது முத்தான பல்வரிசையால் பொன்னான புன்னகையை
இனி எப்போதும் காண்போம் எங்கள்
பஞ்சுக்குட்டியே ஜென்மங்கள்
ஏழேழு சென்றாலும் நீங்காது உன்
நினைவு, மாறாது எம்துயரம்

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாசத்துடன்
சகோதரிகள்



# என்றும் நீங்கா நினைவுகளில்.....

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
என் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கி சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கணமெல்லாம் இருப்பீர்கள்....

அமரவுலகில் உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை நாம் நித்தமும் வேண்டுகின்றோம்.....

காட்டுச் சிவிகையில் கடைசிவழி போனோரை
மீட்டி நினைப்பதுவும் விக்கித்து நிற்பதுவும்
ஊட்டிய அன்பினால் உளம் நிறைந்த பாசத்தினால்



பாசம் நிறைந்த
சகோதரர்கள்



## உன் பிரிவில் என் தவிப்பு........

என் அன்பு மருமகனாம் பஞ்சலிங்கம் எனைவிட்டு பிரிந்தாரோ
பிரியாத அவர் நினைவை என் நெஞ்சில்த்தந்தாரோ

நீரோடும் இடமெல்லாம் பாலோடும் காட்சியைப் போல் நான் பார்க்கும் இடமெங்கும் காண்பது என் மருமகனை என்னோடு அடக்கமுடன் கதைத்திருத்த ஒருமுகத்தை காணாத நான் இங்கு ஏங்குகிறேன் கவிதையாக

என் பாசத் தங்கையவள் பெற்றெடுத்த முத்து ஒன்று தன் உயிரை விட்டதுவோ? கூற்றவனின் செயல் இதுவோ! சிந்தியாமல் செய்ததுவோ! என் அருமை மருமகனை எனை விட்டு பிரித்ததுவோ

அவரது அன்பின்
தாய் மாமா
சபாபதி சபாரட்ணம் - தியாகராஜா
(ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார்)
பண்டாரிகுளம் - வவுனியா.



## சுட்டதில் சுட்டது உந்தன் பிரிவே....

கடல்கடந்து நான் அன்று சென்றேனே ஒருநாள்
அந்நாளில் எனைவந்து வழிஅனுப்பி வைத்தாயே - அதுஎனக்கு திருநாள்
அன்றல்லோ கண்டு கொண்டேன் என் பெறாமகனின் பாசமதை
பாசமாம் அதைக்கூற வார்த்தையோ போதவில்லை

தேசங்கள் மாறினாலும் தம் நினைவே எனக்கொண்டு
வேசங்கள் அற்ற பாசமாம் உனக்குள்ளே
நேசமுற அழைப்பேனே "பஞ்சன்" என உன்னை
நின்னை தற்போது அழைத்தாலே கேட்பாயோ நீயென்னை

எந்தனின் தமக்கையின் தனையனே பஞ்சா
அஞ்சா நெஞ்சம் கொண்டவனே பஞ்சா
நெஞ்சாரத் தொழுதழுவி அணைப்பேனே நானுன்னை
அன்பாக அணைத்திடுவாய் சின்னம்மா என என்னை

உன் உயிர் பிரிவது முன்னமே அறிந்திருந்தால்
வந்திருப்பேன் உனைக் காண என் அன்பு மகனே
காற்றோடு கலந்து விட்டாய் கண்ணிமைக்கும் பொழுதில்
காத்திருப்பேன் ஒருநாள் நீ என்னிடம் வருவாயென!
சுட்டெரிக்கும் வெய்யில் அது எனை சுட்டது தெரியவில்லை
அதில் சுட்டதில் சுட்டது உந்தன் பிரிவே

இங்ஙனம்
சிறிய தாய் குடும்பத்தவர்கள்
(கணேஸ் நாகேஸ்வரி
மற்றும் அவரது பிள்ளைகள்
குடும்பத்தினர்)



# மாமா மாமி புலம்பல்

எங்கள் மருமகனே! வீட்டின் தலைமகனே!
எங்கள் மகள் இன்புறவே இனிய வாழ்வு கொடுத்தீரே
அன்புடன் இணைந்து நீங்கள் அரும்பணிகள் புரிந்தீரே
பண்புடனே மாமா மாமி எனப் பக்குவமாய் அழைத்திடுவீர்
இன்பமுடன் எமக்கு நீங்கள் ஏற்ற பணி செய்தீர்கள்
சித்திரை வருடமென்றால் தந்திடுவீர் கைவிசேடம்
சிறப்புடனே நாங்கள் வாழ சிந்தையிலே நினைத்தீரே
காரைநகர் வந்துவிட்டால் கடற்காற்று சுகமென்பீர்
ஊர்தனைப் பார்த்திடவே உம் உறவுடனே வந்தீர்கள்
பாரினிலே மக்கள் வாழ பல பணிகள் செய்து நின்றீர்
கள்ளமில்லா மருமகனே கடமையினால் வெற்றி கண்டீர்
உள்ளக் கோயிலாக உறைந்து நிற்பீர் எம் மனதில்
மாமா மாமி என்று மாண்புறவே வைத்தீர்கள்
மாறாத் துயராலே வாடுகின்றோம் பிரிவை எண்ணி
நம்பி நின்றோம் நாங்கள் நாளை எமைக்காப்பீர் என்று
விம்மியழ வைத்துவிட்டு விண்ணுலகம் சென்றதேனோ?
குடுப்பத்தைக் கோயிலாகக் காத்திட்ட குலவிளக்கே....

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்
ஈழத்துச் சிதம்பரப் பெருமானை

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

மாமா மாமி



## சென்ற இடம் தான் எங்கோ?

ஆலமரம் வேரறுந்து சாய்ந்தது ஏனோ?
வீசும் காற்று வீச மறந்தது ஏனோ?
ஓடும் நதி ஓடாமல் நின்றது ஏனோ?
அத்தான் அத்தான் என்று
அழைப்பது கேட்கவில்லையா
கேட்காமல் உறங்குவதுதான் ஏனோ

மருமகனாய் என்றில்லாமல் - வீட்டின்
தலைமகனாய் நின்று பணி செய்தீர்
கொடிய பிணி ஒன்று வந்து அத்தான்
கொண்டு சென்ற இடம் தான் எங்கு
தாங்கமுடியாமல் தவிக்கின்றோம் - இன்று

எமக்குள் உறைந்து கிடக்கின்ற
அன்பு நினைவுகள்
மறக்கத்தான் முடியுமோ உமது
அன்பு முகத்தை
உனது அன்பு மனைவியையும்
பிள்ளைச் செல்வங்களையும்
தவிக்கவிட்டு சென்ற இடம்
தான் எங்கோ?

உங்கள் கானல் நீராய் மாற்றிய
காலன் கொடுமையை எண்ணி
மனம் பொறுக்குதில்லையே
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்டீரோ?



மாமா மாமி மைத்துனர் மனம் துடிக்க
மாயமாய் மறைந்தது தான் ஏனோ?
மைத்துனன் மைத்துனி என்றில்லாமல்
சகோதரனாய் நடந்தீரே



கோபம் கொண்டு பேசுவதும்
பின்பு பாசம் கொண்டு கதைப்பதும்
மறக்கமுடியாத சுபாபமே அத்தான்
மறக்கத்தான் முடியுமோ
உங்கள் செயற்பாடுகளை

சுறுசுறுப்பு, விடாமுயற்சி எப்போதும்
உங்கள் முகத்தில் புதுப்பொலிவினை ஏற்படுத்தும்
விறு விறு என்று பேசுவதும், நடப்பதும், வேலை செய்வதும்
என்றும் எங்கள் கண்முன்னே
தினம் தினம் வருகின்றது

வருத்தம் ஒன்று வந்தால்
தினம்தினம் நீங்கள் வருத்தப்பட்ட காட்சியை
எங்களால் மறக்கமுடியவில்லை
ஒரு வருடத்தையும் ஒன்பது நாட்களையும்
எமது வாழ்வில் மறக்கமுடியாத நாளாக்கி
எங்குதான் சென்று மறைந்தீர்கள் அத்தான்

ஆஸ்பத்திரியில் வைத்தியரை, ஊழியரை
சகநோயாளியை இனிக்க இனிக்க பேசி
இன்புறச் செய்தீர்கள்
நோயாளி போல் இல்லாமல்
சுகதேகி போல் நடந்தீர்கள்

இறுதியில் ஆஸ்பத்திரியில் நடந்து கொண்டவிதம்
எல்லோரையும் ஆச்சரியப்படுத்தியதே அத்தான்
எதையும் நாங்கள் பொறுட்படுத்தவில்லை
உங்கள் உயிர்தான் பெரிதாகப்பட்டது
எப்பாடுபட்டாலும் உயிரைக் காக்க
எத்தனை வைத்தியரிடம் கதைத்துத்தான் பார்த்தோம்
எல்லாம் கானல் நீராய் போனதே - அத்தான்
எம்மைத் தவிக்க விட்டு உங்கள் பூ முகம்
மறைந்தது ஏனோ?

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

மைத்துனிமார்கள்



# எம் நெஞ்சத் திரையில் என்றும் அழியாத ஓவியம்

இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர் போல் யார்என்று ஊர் சொல்ல வேண்டும்
என்றும் புன்னகை முகத்துடன்
புனிதமாய் வாழ்ந்தவர் எங்கள்
பஞ்சண்ணை
எளிமையான தோற்றமும்
அன்பான வார்த்தையும் - என்றும்
இவரின் பொக்கிசங்கள்

ஒரு ஓவியம் தனது
கடைசி அத்தியாயத்தை முடித்துக் கொண்டதோ
விழுதுகளை விசும்ப வைத்துவிட்டு
ஒரு ஆல விருட்சத்தின்
ஆணி வேர் அறுந்து போனதோ?

எம் துயர் தீர்க்க நீங்கள்
முன் நின்று உழைத்தீர்கள்
உம் உயிர் காக்க
எம்மால் முடியவில்லையே - அத்தான்

பாரினிலே உமைப் போல்
பார்த்ததில்லையே யாரையும்
திண்ணிய நெஞ்சமும் திறம்படச்
செயலாற்றும் உம் உள்ளமும்
என்றும் எம்மைக் கவர்ந்ததே - அத்தான்

உங்கள் அழகிய பூ முகத்தை
எப்போது காண்போம் - அத்தான்
மீண்டும் காலங்களை மீட்டித்தான்
பார்க்கின்றோம்
நெஞ்சைவிட்டு அகலவில்லை உங்கள் நினைவுகள்
*உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

இங்கனம்
மைத்துனிமார்



# கண்ணீர் மாலைகள்

பாசமிகு அத்தானுக்கு
பாரிசில் இருந்து எழுதும்
பாசமிகு மச்சாளின்
கண்ணீர் மாலைகள்

என்றும் தொலைபேசியில்
கேட்கும் உங்கள்
அன்பு வார்த்தைகள் இன்று
தொலைபேசியில் கேட்கவில்லை
நீங்கள் பேசிய அன்பு மொழியும்
கேட்கவில்லை - ஆனால்
இன்று CD யில் உம் முகம்
பார்த்து பார்த்து அத்தான்
பரிதவிக்கின்றேன்

அக்காவிற்கு நல்ல துணையாய்
பிள்ளைகளுக்கு நல் அப்பாவாய்
காவலனாய் திகழும் வேளை
கனவில் கண்டதை மெய்ப்பட
வைக்கும் வேளை
காலனவன் அழைத்த இடம் தான் எங்கு

கொடிய நோய் வந்தாலும்
இன்னும் சிலகாலம் எம்முடன் இருப்பீர்கள்
என எண்ணி மகிழ்ந்திருந்தோம் - ஆனால்
நோய் என்ற கொடியவன் உங்களை
எம்மிடம் இருந்து பிரித்துவிட்டானே
ஆயினும்
எமது துன்பத்தை அடக்கி
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

தியாகு காந்தி



## எங்கே சென்றீர்?

காலம் எல்லாம் கண்ணீர்விட்டு நாம் அழ
காலன் அவன் கவர்ந்து விட்டானே
கண்ணீரை எமதாக்கி - அத்தான்
இறைவனடி சேர்ந்தீரோ?

வீட்டிற்கு ஒருமகனாய் நான் - அன்று
கூடி விளையாட ஒருவர் இல்லாப்
பாவி ஆனேன்
அக்காமார் தங்கையரின் துணைவர்கள்
நான்கு ஆண் சிங்கங்கள் இன்று
தோழோடு தோள் கொடுக்க
பெரியத்தானாய் நீங்கள் இருந்து
இன்பதுண்பங்களை பங்கு எடுத்தீர்கள்

ஊரிற்கு உத்தமராய் இருந்து
எமை ஊமையாக்கி
இறைவனடி சேர்ந்தீர்கள் - உங்கள்
உறவுகள் கண்ணீரில் மூழ்க
உயிரைத் துறந்தது ஏனோ?
பிஞ்சுகள் வெம்பி அழ - எம் அக்காள்
பரிதவிக்கிறாள் - உங்கள்
ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

மைத்துனன்
குடும்பம்



## பாசத்தின் பரிதவிப்பில்..............

பாசத்தின் பிறப்பிடமாய்
பாரதனில் பிறந்திட்டீர்
பரிதவித்த எனக்கு இங்கு
பராபலனை தந்திட்டீர்

பெறாமகனன்றோ நீர் நினைத்தீர்
பெற்ற மகனன்றே எனைக் காத்தீர்
பெரியவரும் சிறியவரும் எனைப் பேசாமல் தடுத்திடுவீர்
பெற்றவரைப்போலே எனை "துஷி" எனவே அழைத்திடுவீர்

எந்தனிடம் பழகிட்ட அன்புள்ளம் நீரன்றோ
எந்தனிடம் காட்டிட்ட அன்புக்கு நிகரன்றோ
எங்கேயும் எப்போதும் எனைக் கண்டால் - கண்டவுடன்
என்னருமை மகனென்று நினைத்திடுவீர் உள்ளமதில்
எனைப் பார்ப்பான் துஷியென்று சொல்லிடுவீர் தினம் தினமும்
என்னப்பு என்று சொல்லி தொலைபேசி தன்னில் பேசிடுவீர்

பாடசாலை தனில் விட்டு
பக்குவமாய் என்னுடன் கதைத்து
பரீட்சையில் சித்திபெற அழைக்காமல் ஓடிவந்து
"அன்பு" என்னும் மூன்றெழுத்தை தந்திட்டீர் என் வாழ்வில்

அறிவுரையும் சொல்லிடுவீர் அறிவுற்று வாழ்ந்திடவே
அறியாத இளம் வயதில் எனை இளக வைத்தீரோ!
அறிவற்ற நானுமன்று உமைக் காணாமல் ஓரிருநாள்,
அறிவுற்று இருந்துவிட்டேன் அதனாலோ என்னவோ
எனைவிட்டுப் பிரிந்து விட்டீர்.



காலனவன் என்ன காரியம் செய்தானோ?
காலையிலே உம் உயிரை கவர்ந்திட்டு சென்றானோ
காணாமல் நான் தவித்தேன் கண்டவுடன் பரிதவித்தேன்
பஞ்சன் பெரியப்பா என இனியாரை நான் அழைப்பேன்
அழைத்தாலும் யார் அறிவார் இறைவன் உமைத்தவிர

என் அருமைப் பெரியப்பாவே உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை நான் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**அன்புடன்**
**பெறாமகன்.**






## மருமக்கள் புலம்பல்

ஊர் புகழும் உத்தமனாய் இருந்து
பாசமுள்ள வார்த்தைகளால் - எங்களை
வாழவைத்த அன்புத் தெய்வமே
அன்பின் இருப்பிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
திகழ்ந்த அன்பு மாமாவே
பாரினில் உங்கள் குரல்
பரவிக் கிடக்கையில்
ஊரெல்லாம் உங்கள் பெயர்
ஓங்கி ஒலிக்கையில்
இடி விழுந்தது எம் வாழ்வில்
உங்கள் உயிர் பிரிந்தது அந்நாளில்
மாதம் ஒன்று ஆனதே
பஞ்சா மாமாவே
ஆறுதல் அடையாமல்
ஆண்டாண்டாய் தவிக்கப் போகின்றோம்
ஆண்டவன் மடியில்
நீங்கள் ஆறுதல் அடைந்திட
மாண்டவர் அனைவருக்கும்
வேண்டுதல் செய்கின்றோம்.

பூக்கிற மலர்கள் எல்லாம்
வாசமும் இல்லை மாமா
மனம் கவர்ந்த மலர்கள்
மனதில் இருந்து வாடுவதும் இல்லை - மாமா
வாடாத வாசம் கலையாத
வண்ணமலர் மாமா நீங்கள்
நிலைத்து விட்டீர்கள் - எம்முள்
நிலையாக நீங்காத சிலையாக
எதைப் பற்றியும்
நான்கு வரி எழுதலாம்





எவராலும் 49 ஆண்டு கால
உங்கள் புகழை எழுத முடியாது
உச்சம் தொட்டவர் நீங்கள்
மிச்சம் எழுத என்னிடம் ஏதும் இல்லை
அச்சம் இன்றி சொல்கிறேன்
நீங்கள் எங்கள் அரசன் மாமா

ஒன்றரை வருடத்தில் உடலை உருக்கி, உருக்கி
உள்ளம் மனம் உயிர் துடிக்க, உயிரிலும் உறையும்
அணுவை உறிஞ்சி எடுத்தானே
ஓரவஞ்சக காலனவன்

உமக்கென்று ஒழிவு மறைவு எதுவும் இருந்ததில்லை
அந்த வெள்ளை உள்ளத்திற்காகத் தான்
கடைசிவரை ஆருயிர் சொந்தமும் புடை சூழ
உயிர் நீத்தீரோ எங்கள் மாமா

சில கேள்விகளுக்கு பதில் கிடைக்கும்
எமக்கு பதிலே பெற முடியாத கேள்வியாகி
விட்டீரே எங்கள் ஆசை மாமாவே!
பஞ்சமாமாவே எம்மைவிட்டு பஞ்சாய்ப்
பறந்தீரே எங்கள் மாமா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன் உங்கள்
பாசமான மருமக்கள்





## பெறாமக்கள் புலம்பல்

எங்கள் பாசமிகு சித்தப்பாவே
எம்மை பரிதவிக்கவிட்டு - சென்ற
காரணம் தான் என்ன
பாரினில் பிறந்தீரே
பாசத்தைத் தந்தீரே பெற்ற பிள்ளைகள் போல்
அன்புடன் தான் "ரோகினி" என அழைத்தீரே எம்மை
காலனவன் வருவதை அறிந்தோ - முன்
இரவில் ஆவலாய் எம்மை பார்த்தீர்
மண்ணுலகில் மனமகிழ்ந்து இருந்தீரே
விண்ணுலகில் எதைக் கண்டு சென்றீர்

பஞ்சன் சித்தப்பா என்று யாரை இனி நாங்கள் அழைப்போம்
எத்தனை பேர் இருந்தாலும்
உன் போல் யார் உளரோ
கண்ணிலே கருவிழி போல் - நீர்
எம்முடன் கூடி வாழ்ந்தீர்
பண்ணிய செயல்களை எல்லாம் - எம்
மனதில் பரவி விட்டு விண்ணுலகம் சென்றீரோ
உண்மையை சொல்லிடுவீர்
உலகிற்கு திரும்பிடுவீர்
நீர் சென்ற பாதையிலே காத்திருப்போம்
உயிருள்ளவரை
கலங்கியுள்ள எம் நெஞ்சம்
கரைந்து விடும் மறவாதீர்

அன்புடன்
பெறாமக்கள்



# நெஞ்சில் நிறைந்தவர் நினைவில் நிற்பவர்

எனது தந்தையின் சகோதரியின் மகனுமான, எனது கணவரின் உடன் பிறப்புமான இவர், எமது குடும்பத்தில் ஏதாவது கஷ்டங்கள் சுமைகள் ஏற்படும் வேளையில் தனது குடும்பத்தில் ஏற்பட்டது போன்று பங்கேற்றவர் என்று சொன்னால் மிகையாகாது. கூப்பிட்ட குரலிற்கு ஓடிவருவார். பல தடவைகள் எனக்கும் இவருக்கும் கருத்துவேற்றுமைகள் ஏற்பட்ட போதிலும் என்னில் நிலையான அன்பு வைத்தவர்.

அவருக்கு நோய் ஏற்பட்ட வேளையில் சிகிச்சைக்காக வைத்தியசாலை செல்லும் வேளையில் அவரது குழந்தைச் செல்வங்களை எம்மிடம் விட்டுச் செல்வார். தனது நோய் தொடர்பாக என்னுடன் அடிக்கடி மனம்விட்டுப்பேசி எனது அபிப்பிராயத்தைக் கேடபார் "உங்கள் விருப்பப்படி செய்யுங்கள் எல்லாம் இறைவன் செயல் என்பேன்"

தனது மகள் பூப்பெய்திய வேளையில் காந்தனுக்கு மகள் இல்லை என்று அவரே முதற்கடமை ஆற்ற வேண்டும் எனச்சொன்னார். இறுதியில் அவரிடமே பொறுப்புக் கொடுத்துவிட்டார்." தக்கார் தகவிலார் என்பது அவரது எச்சத்தார் கொள்ளப்படும்" என்ற குறளிற்கு இணங்க அவரது பிள்ளைகளைக் கொண்டு எதிர்காலத்தில் இவரை அறிந்து கொள்ளலாம்.

தனது உயிர் பிரியப்போகின்றது என்று உணர்ந்த வேளையிலும் தனது தாயைப் பார்க்குமாறு கூறியதில் இருந்து அவரது தாய்ப்பாசத்தை அறிந்து கொள்ளலாம். என்னைக்காணவில்லை என்று தேடிக்கொண்டு இருந்தவர் கண்டவுடன் விட்ட கண்ணீரும் அவரது உருக்குலைந்த உடலும் என் நெஞ்சை நெகிழ வைக்கின்றது.



இறுதி வேளையில் பாவற்குளம் செல்ல வேண்டாம் மழை என்று கூறியதிற்கு நீங்கள் வராட்விட்டால் நில்லுங்கள் என்று கூறி தன்னைத் தாய்வீட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு கூறி தனது தந்தையார் இறந்த அதே வேளையில் இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தங்கள் நீங்கா நினைவுடன்
சொந்த மச்சாள் குடும்பம்





# You will never be forgotten....

We little knew that morning
God was going to call your name
In life we loved you dearly
In death we do same
It brokes our heart to lose you
You did not go alone....
A part of us went with you
The day god called you at home
You left us beautiful memories
Your love is still our guide
And though we cannot see you
You are always at our side
Our family chain is broken
And nothing seems the same,
But as god calls us one by one
The chain will link again....

**Sadly missed and fondly remembered with undying love and gratitude**
**May God'd blessings be with you**

**Rest In Peace ♡♡♡**

**Ever Loving**
**Sri and His family**



**சிவஸ்ரீ கு.இராமசாமி குருக்கள்** (பிரதமகுரு)
ஸ்ரீ மகாவிஷ்னு தேவஸ்தானம். ஆனந்தபுரம், புதுகுடியிருப்பு முல்லைத்தீவு
தற்போதைய முகவரி
4ம் கட்டை, கிராம அலுவலக வீதி,
சிவபுரம், வவுனியா.

## ஆத்மாஞ்சலி

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" (குறள்)

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை போல் தனது தாய் தந்தையரைவிட தன் கடமைக்கும் நேரத்திற்கும் மதிப்புக் கொடுத்து எமது செக்கட்டிப்புலவு பிரிவில் கடந்த இரண்டு வருடங்களாக தன் பொறுப்புகளையும், கடமைகளையும் சரியான முறையில் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் எமது கிராம அலுவலகர் திரு.இ.த.ஸ்ரீகாந்தன் அவர்களின் அருமைச் சகோதரர் அமரர்.தளையசிங்கம்.பஞ்சலிங்கம் அவர்கள் கனிவான குடும்பத் தலைவனும் பெருநோக்கான சமூகத்தொண்டருமான இவர் கண்திறந்த சித்தி விநாயகர் பெருமான் அருளால் பாவற்குளத்தில் பிறந்தார். தன் குடும்பத்துடன் நிறைவான வாழ்வு வாழ்ந்த இவர் தான் பிறந்த இடத்திலேயே உலக வாழ்வை நீர்த்தார். தாவரபோசணத்தை உண்டு வாழ்ந்து வந்த இவர் கரவருடம் புரட்டாதி மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 5.30 மணியளவில் பூர்வ பட்சத்து சதுர்த்தசி திதியில் இறையடி எய்தினார்.

அன்னாரின் தாய், குடும்பத்தினர்
மற்றும் செக்கட்டிப்புலவு கிராம அலுவலகர் அவர்களுக்கும்
எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன் அத்தோடு
அன்னாரின் ஆத்மா சாந்திக்காக எம்பெருமானைப்பிரார்த்திக்கின்றேன்.

**"மரணங்கள் நிச்சயமானது தான் ஆனால் மரணத்தின்
துயர் தாங்க முடியாதது"**

இங்கனம்
**கு.இராமசாமி குருக்கள்**

தேற்றம்

ஊரெல்லாம் கூட்டி ஒலிக்கஅழுதிட்டுப்
பேரினை நீக்கி பிணம் என்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு
போயச்சுட்டிட்டு நீரினில் மூழ்கி
நினைப்பொழிந்தார்களே.





# கந்த சஷ்டிகவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் -கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலனருள்
கந்தர்சஷ்டி கவசம் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோற்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!

சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண வீரா நமோ நம
வசர ஹணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூசணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அருள்வேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க!
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க!
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!

சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க!
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க!
முன்னை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க!
நாவில் சரஸ்வதி நற்றுணையாக!
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியினில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளி வாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்

ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார்குழலாள் கலைமகள் நன்றாய
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொர்ணமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பதுன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோ மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்

எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ்கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்!
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்!

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று





## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த
## சகல கலாவல்லி மாலை

1) வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சகமேழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்தாக
உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலா வல்லியே!

2) நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே!

3) அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே!
சகல கலா வல்லியே!

4) தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குஞ்ரீங் கருணைக் கடலே!
சகல கலா வல்லியே!

5) பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே!

6) பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பானுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலுங்கனலும்
வெங்காலு மன்பர்
கண்ணுங் கருந்தும் நிறைந்தாய்!
சகல கலா வல்லியே!

7) பாட்டும் பொருளும் பொருளாற்பொருந்தும்
பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கணல்காய
உளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம்
தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலா வல்லியே!

8) சொல்விற் பனமும் அவதானமும்
கவிசொல்ல வல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலா வல்லியே!

9) சொற்கும் பொருட்கு முயிராம்
மெய்ஞ்ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலா வல்லியே!

10) மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவில் பணியச்செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பி னுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ!
சகல கலா வல்லியே!



# கருமாரி ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்த வல்லி தெய்வயானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாக்ஷி
விழிக்கோல மாமதுரை மீனாக்ஷி
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே
(கற்பூர)

புவன முழுதாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் நாகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்திடும் காளைஸ்வரீ
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமான பரம்பொருளே ஜெதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ யாதரி
(கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்த
அன்னையவள் நீ இருக்க உலகில் மற்ற
அன்னையரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின்குரல் கேட்டு உன்முகம் திருப்பு
சிரித்தபடி என்னை தினம் வழியனுப்பு
(கற்பூர)

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாட வேண்டும்
பண்ணமைக்கும் நா உனையே பாட வேண்டும்
பத்தியோடு கை உனையே கூடவேண்டும்.
எண்ண மெல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுரம் மாரியம்மா
மக்களுடை குறைகளை நீ தீருமம்மா
(கற்பூர)

நெற்றியினில் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலே உன் திருநாமம் நிலவ வேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெல்லாம் நீடுழி வாழவேண்டும்
ஜோதியிலே நீ இருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்கு சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா

(கற்பூர)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமையன்றிக் காவலுண்டோ
கன்றுக்குப் பசுவின்றி சொந்தமுண்டோ
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ
எண்ணெய்க்கும் விளக்கிற்கும் பேதமுண்டோ
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ

(கற்பூர)

அன்புக்கே நானடிமை யாக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்கவேண்டும்
வஞ்சத்தை என்னெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நானென்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீ என்றும் வாழவேண்டும்

(கற்பூர)

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா வொன்றால் முடியவில்லை
நம்பிடவே மெய்தன்னில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை.

## சில சைவக் கிரியை விளக்கம்

பிராணாயாமனம் : பிராணவாயுவை அடக்குவதனால் மனத்தை ஒரு வழிப்படுத்தி திருவருளில் நிறத்துதல்.

பிராண + ஆயாமம் : பிராண வாயுவை அடக்குதல்

பவித்திரமணிதல் : மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு அணிவிரலில் அணிவது.

சங்கற்பம் : சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து நிறுத்தல்.

சகளீகரணம் : சரீரத்தை சிவரூபமாக்குதல்

சகளம் : சரீரம்

கரணம் : செய்தல். சிவ வடிவத்திற்குரிய சிவ மந்திரங்களை எமது சரீரத்தால் பதித்பால் சிவவடிவமுண்டாகும்.

கும்பம் வைத்தல் : கடவுளை லிங்கம் முதலியவற்றிலே வழிபடுதல் போலக் கும்பத்திலும் வழிபடலாம்.

கும்பம் உடம்பின் பாவனை : அதில் சுற்றிய சீலை - தோல், நூல் - நாடிகள், குடம் - தசை, தண்ணீர் - இரத்தம், இடப்படும் இரத்தினம் - எலும்பு, தேங்காய் - தலை, மாவிலை - தலைமயிர், தர்ப்பை - குடுமி, அதில் பதிக்கப்படும் மந்திரம் உயிர்.

# அறுபத்து மூவர் அவதார நந்நாள்

| | | |
|---|---|---|
| அதிபத்தர் | ஆவணி | ஆயில்யம் |
| அப்பூதியடிகள் | தை | சதயம் |
| அமர்நீதியடிகள் | ஆனி | பூரம் |
| அரிவாள்தாயர் | தை | திருவாதிரை |
| ஆனாயர் | கார்த்திகை | அஸ்தம் |
| இசைஞானியர் | சித்திரை | சித்திரை |
| இடங்கழியார் | ஐப்பசி | கார்த்திகை |
| இயற்பைகையார் | மார்கழி | உத்திரம் |
| இளையான்குடிமாறனார் | ஆவணி | மகம் |
| உருத்திரபசுபதியார் | புரட்டாதி | அசுவதி |
| எறிபத்தர் | மாசி | அஸ்தம் |
